அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அந்த வழித்தடம் மீண்டும் ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, அந்த வழித்தடங்களில் பேருந்து இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

277—

நவீன மின் தகன மேடை

***9708—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியில் நவீன மின் தகன மேடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சியில் மொத்தமுள்ள எட்டு இடுகாடு மற்றும் சுடுகாடுகளுள், மூன்று சுடுகாடுகளை இந்துக்களும், மூன்று இடுகாடுகளை முஸ்லிம் இனத்தவரும், இரண்டு இடுகாடுகளை கிறிஸ்தவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். செஞ்சி பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், நவீன மின் மயானம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொல்லப்போனால், செஞ்சி பேரூராட்சியில் இந்துக்கள் பயன்படுத்துகின்ற சுடுகாடுகள், இரண்டு பிரிவுகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் என்.ஆர்.பேட்டை, பீரங்கிமேடு, சக்கராபுரம், எம்.ஜி.ஆர். நகர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய சுடுகாடுகள், தேசிய நெடுஞ்சாலையில் உள்ளன. சக்கராபரணி ஆற்றின் மேலேயே அதற்கான எரிமேடை அமைக்கப்பட்டுள்ளது. அந்த வழியாக வாகனங்கள் செல்லும்போது, அதனுடைய புகையானது வாகனங்கள் செல்லும் வழியை மறைக்கக்கூடிய வகையில் இருக்கின்றது. சக்கராபரணி ஆற்றின் அருகில், கலவாய் சாலையில், ஆற்றுப் படுகையின் மேலேயே நிலம் இருப்பதாக பேரூராட்சியால் கண்டறியப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு நவீன மின்தகன மேடை அமைத்துத் தருவதற்கு முன்வந்தால், பேரூராட்சிமூலம் அந்த இடத்தை ஒதுக்கித் தருவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் நவீன மின் தகன மேடை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி பேரூராட்சியினுடைய மொத்த மக்கள்தொகை 24,750 ஆகும். இப்பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. இப்பேரூராட்சியில் மொத்தம் எட்டு இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள் உள்ளன. இதில் சக்கராபரணி ஆற்றங்கரை-கலவாய் சாலை, சக்கராபரணி ஆற்றங்கரை-திண்டிவனம் சாலை, சிறுகடம்பூர் காலனி ஆகிய இடங்களில் இந்துக்களுக்கான மூன்று சுடுகாடுகள் அமைந்துள்ளன. செஞ்சி, மந்தைவெளி, தேசூர்பேட்டை சாலை, சந்தைத்தோப்பு ஆகிய இடங்களில் இஸ்லாமியர்களுக்கான மூன்று இடுகாடுகள் அமைந்துள்ளன. திண்டிவனம் சாலை மற்றும் புனித மிக்கேல் ஆலயம் அருகில் அமைந்துள்ள இரண்டு இடங்களில் கிறிஸ்தவர்களுக்கான

இடுகாடுகள் உள்ளன. இவை அனைத்தும், பிரதான சாலையில், நல்ல தார்ச் சாலையில் அமைந்துள்ளன.

மேலும், செஞ்சி பேரூராட்சிக்கு அருகில் விழுப்புரம், திண்டிவனம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகராட்சிகளில் நவீன மின் மயானங்கள் செயல்பட்டு வருகின்றன. பேரூராட்சி நிருவாகம் அளித்துள்ள விவரங்களின்படி, தற்போது செஞ்சி பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், நவீன மின் மயானம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சக்கராபரணி ஆற்றங்கரையில் கலவாய் சாலை செல்கின்ற இடத்தில், நேரில் சென்று பார்த்தபோது ஆற்றங்கரைக்கு இரண்டு பகுதிகளிலும் நிலம் கண்டறியப்பட்டது. பேரூராட்சி நிலம் ஒதுக்கித் தரும் பட்சத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நவீன மின் மயானம் அமைத்துத் தருவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன மின் தகன மேடை அமைக்க துறையின் மூலமாக நிலம் கேட்டபோது, அந்தப் பகுதியில் நிலம் இல்லையென்றுதான் பேரூராட்சியால் பதில் சொல்லப்பட்டுள்ளது. இப்போது தனியார் நிலத்தில் நவீன மின் தகன மேடை பல இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. அதுபோன்று தனியார் நிலம் எடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தால், அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி, செவ்வாய்ப்பேட்டையில் உள்ள சந்தைப்பேட்டை பகுதியில் இருக்கின்ற மயானத்தில், நவீன மின் தகன மேடை அமைப்பதற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, இதுவரை பணிகள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இடத்தை ஆய்வு செய்து, உடனடியாக அங்கு நவீன மின் தகன மேடை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் மயான மேடை அமைப்பதைப் பொறுத்தவரையில், பல பிரச்சினைகள் அங்கு வரும் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அந்தப் பகுதியில் இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, துறையின் அதிகாரிகளிடம் பேசி, அந்த் இடத்தை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தத்தனேரியில் மின் தகன மயானம் செயல்பட்டு வருகிறது. அந்த மயானத்தின் தெற்குப் பகுதியில் சடலங்களைப் புதைக்கக்கூடிய வகையில், 14 ஏக்கர் சுற்றளவில் 8 அடி உயரத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இறந்தவர்களின் உடலைப் புதைப்பதற்காக வருகின்றவர்கள் உட்காருவதற்கும், இறப்பைப் பதிவு செய்வதற்கும் அறைகள் கட்டப்பட்டுள்ளன. இவை இரண்டுமே தற்போது பயன்பாட்டிற்கு வரவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை

எடுப்பார்களா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உட்பட 12 மாநகராட்சிகளில் இதுபோன்ற பிரச்சினைகள் எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பொருளைக் குறித்து மதுரை மாநகராட்சி அதிகாரிகளிடம் எடுத்துச்சொல்லி, உடனடியாக பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 278, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

278—

ஜவுளிப் பூங்கா

***35183**—**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, பள்ளியாடியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, பள்ளியாடியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என